(See Rule 42)
DEPOSITION OF WITNESS
(Chapter XXIII, Cr.P.C.)
IN THE COURT OF JUDICIAL MAGISTRATE, TIRUCHENGODE
**STC.No.155/2026**

Deposition of Prosecution/Defence/Court Witness for PW.3 (LW.3 )

| | | |
|---|---|---|
| Name | : | மனோகரன் |
| Father's/Husband Name | : | அங்கமுத்து |
| Village | : | எலச்சிபாளையம் |
| Taluk | : | திருச்செங்கோடு |
| Occupation | : | மெடிக்கல் ஸ்டோர் |
| Age | : | 63 |

(எதிரி ஆஜரில்லை. எதிரி தரப்பில் குவிமுச பிரிவு 317ன் கீழ் மனு தாக்கல் செய்யப்பட்டு அனுமதிக்கப்பட்டது. எதிரி தரப்பு கற்றறிந்த வழக்கறிஞர் முன்னிலையில் சாட்சி விசாரிக்கப்படுகிறார். )

Solemnly affirmed in accordance with the provisions of the Oaths Act, 1969 (Central Act of 1969) on the day of **14.07.2026.**

**முதல் விசாரணை:–**

நான் திருச்செங்கோடு – ராசிபுரம் செல்லும் சாலையில் மெடிக்கல் ஷாப் வைத்து தொழில் செய்து வருகிறேன். கடந்த 2025ம் வருடம் 12 வது மாததில் ஒரு நாள் நான் கடையில் வேலை செய்து கொண்டிருந்தபோது ராசிபுரம் – திருச்செங்கோடு செல்லும் சாலையில் சித்ரா என்பவர் நடந்து சென்று கொண்டிருந்தார். திடீரென ஒரு சத்தம் கேட்டது. வெளியில் வந்து பார்த்தபோது சித்ராவிற்கு பின்னால் வந்த ஒரு இருசக்கர வாகனம் அவர் மீது மோதி விபத்து ஏற்பட்டிருந்தது. நான் சம்பவத்தை சத்தம் கேட்டுத்தான் வந்து பார்த்தேன். இந்த வழக்கு சம்பந்தமாக போலிசார் என்னை விசாரணை செய்யவில்லை.

**அரசு தரப்பில் சாட்சி பிறழ்சாட்சியாக பாவித்து குறுக்கு விசாரணை செய்ய அனுமதி கோரி அனுமதி வழங்கப்பட்டது .**

**அரசு தரப்பில் குறுக்கு விசாரணை:-**

கடந்த 20.12.2025ம் தேதி நான் கடையில் இருந்த போது சித்ரா என்பவர் திருச்செங்கோடு - ராசிபுரம் மெயின் ரோட்டில் வடக்கிலிருந்து தெற்கு நோக்கி ரோட்டை கடந்து ரோட்டின் ஓரமாக சென்றுகொண்டிருந்தபோது ராசிபுரம் பக்கமிருந்து அதிவேகமாகவும், கவனக்குறைவாகவும் TVS Electrict பைக் வாகனத்தை அவர் மீது மோதி விபத்து ஏற்படுத்தினார் என்றால் சரியல்ல. மேற்படி சம்பவத்தை நேரில் பார்த்துவிட்டு தற்போது தனக்கு தெரிந்த காரணங்களுக்காக மாற்றி சாட்சியம் அளிக்கிறேன் என்றால் சரியல்ல.

**எதிரி தரப்பில் குறுக்கு விசாரணை**:- இல்லை

**மறுவிசாரணை**:- இல்லை

RANGARAJ P

Digitally signed by RANGARAJ P
Date: 2026.07.14 17:01:35 +0530

(See Rule 42)
DEPOSITION OF WITNESS
(Chapter XXIII, Cr.P.C.)
IN THE COURT OF JUDICIAL MAGISTRATE, TIRUCHENGODE
**STC.No.155/2026**

Deposition of Prosecution/Defence/Court Witness for PW.4 (LW.5 )

| | | |
|---|---|---|
| Name | : | கார்த்திக் |
| Father's/Husband Name | : | தங்கவேல் |
| Village | : | எலச்சிபாளையம் |
| Taluk | : | திருச்செங்கோடு |
| Occupation | : | வியாபாரம் |
| Age | : | 45 |

(எதிரி ஆஜரில்லை. எதிரி தரப்பில் குவிமுச பிரிவு 317ன் கீழ் மனு தாக்கல் செய்யப்பட்டு அனுமதிக்கப்பட்டது. எதிரி தரப்பு கற்றறிந்த வழக்கறிஞர் முன்னிலையில் சாட்சி விசாரிக்கப்படுகிறார். )

Solemnly affirmed in accordance with the provisions of the Oaths Act, 1969 (Central Act of 1969) on the day of **14.07.2026.**

**முதல் விசாரணை:–**

என்னிடம் காட்டப்படும் பார்வை மகசரில் உள்ள முதல் கையெழுத்து என்னுடையது தான். மேற்படி கையெழுத்தை கடந்த 12 வது மாதத்தில் ஒரு நாள் தேதி ராசிபுரத்திலிருந்து திருச்செங்கோடு செல்லும் சாலையில் சண்முகா ஜவுளி ஸ்டோர் அருகே நடந்த விபத்து சம்பந்தமாக போலிசார் சம்பவ இடத்தை பார்வையிட்டு வரைபடம் வரைந்து பார்வை மகசர் தயார் செய்தார்கள். அதற்கு சாட்சியாக நான் கையொப்பம் செய்தேன். அந்த பார்வை மகசர் **அ.சா.ஆ.2** ஆக குறியீடு செய்யப்படுகிறது. இந்த வழக்கு சம்பந்தமாக போலிசார் என்னை விசாரித்தார்கள்

<u>**எதிரி தரப்பில் குறுக்கு விசாரணை**</u>**:–**

நான் வரைபடம் வரைந்த தாளில் தான் கையெழுத்து செய்தேன் என்றால் சரிதான். போலிசார் கையெழுத்து போட சொன்னதால் கையெழுத்து போட்டேன். அதில் என்ன விவரம் எழுதியிருந்தது என்று எனக்கு தெரியாது என்றால் சரியல்ல. நான் காவல் நிலையத்தில் வைத்து கையெழுத்து செய்தேனா என்றால் சரியல்ல.

**மறுவிசாரணை:–** இல்லை

RANGARAJ P

Digitally signed by RANGARAJ P
Date: 2026.07.14 17:01:43 +0530